FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364183

1. District மாவட்டம்: கள்ளக்குறிச்சி PS காவல்நிலையம்: மு.த.க. பிரிவு Year ஆண்டு: 2026 FIR No மு.த.அ. எண்: 86/2026 Date நாள்: 04.07.2026

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act, Sections பிரிவுகள்: 7 and 13(1)(a)
(ii) Act சட்டம்: 1988 as Amended by the PC Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 03.07.2026 Date to நாள் வரை: 04.07.2026
Time Period : நேர அளவு — Time from நேரம் முதல்: 16.00 Hrs Time to நேரம் வரை: 02.30 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 04.07.2026 Time நேரம்: 12.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Vol - I Time நேரம்: 12.00 Hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் நகரிலையில் நடத்திய செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மேலாய் 3 கி.மீ தெற்கு மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி: நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திருமதி. நகிலா பாலு குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : இந்தியன் நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் தலைமை ஆசிரியர், கா.பாய் — (g) Address : முகவரி: மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகம் கடலூர்.
விருத்தாசலம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைபெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திருமதி. E. சந்தியா, நிர்வாக அலுவலர் 2. திருமதி. அமலோற்பவ சகாயராணி, நகர் நல அலுவலர். 3. திரு. கலைக்கதிரவன், கொறடா 2 தலையாரி. 4. திரு. தினகரன், கிராமணை 2 தலையாரி / மருத்துவர். 5. திரு. சரத்குமார் குமார், அலுவலக அலுவலர். 6. திரு. மணிகண்டன், காரணம், மற்றவரும் நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

04/07/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.2026

Name: பெயர் .....
Rank: நிலை DSP No. எண் .....

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.05/2026, u/s 7 and 13(1) (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது, அம்மையீர், நான் இன்று 04.07.2026-ந் தேதி சுமார் 12.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஆய்வுக்குழு ஆய்வாளர் சு.நசிமாபானு அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று 04.07.2026, 14.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.05/2026/KLK, u/s 7 and 13(1) (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர் சு.நசிமாபானு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,கள்ளக்குறிச்சி. ந.க.எண்:ஆகு1/360/2026, நாள்.04.07.2026 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு கள்ளக்குறிச்சி மாவட்டம் - கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகம் - 03.07.2026 முதல் 04.07.2026 வரை கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:03.07.2026 முதல் 04.07.2026 வரை. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு ஆய்வாளரான திருமதி.சு.நசிமாபானு ஆகிய நான் 03.07.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர், நிர்வாக அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் வீட்டு வரி, தொழில் வரி, சொத்து வரி ஆகியவை வசூலித்தல், புதிய வீடுகள் மற்றும் புதிய வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குதல், அனுமதி அற்ற கட்டிடங்களுக்கு புதிய அனுமதி வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேடியாகவும், வருவாய் ஆய்வாளர் மற்றும் காசாளர் மூலமாகவும் அலுவல் நேரத்திலும் அதன் பின்பும் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்மகமான தகவலின் அடிப்படையில் நான் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சுமார் 14.30 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.சத்தியராஜ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம், கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து நானும் காவல் துணை கண்காணிப்பாளரும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினருடன் உடனடியாக அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 15.45 மணியளவில் கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் நகராட்சி அலுவலகத்தை கண்காணித்து மாலை சுமார் 16.00 மணிக்கு கள்க்குறிச்சி to சேலம் ரோட்டில் கிழக்கு பார்த்த காம்போண்டில் கிழக்கு பார்த்தவாறு அமைந்து இருக்கும் நகராட்சி அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது எங்களையும், எங்களது குழுவினரையும் கண்ட சிலர் பயந்து செல்ல முற்பட்டனர். அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தின் முகப்பு வாசல் கேட்டை தன்னுடன் வந்த காவல் குழுவினரை மூட சொல்லிவிட்டு, அலுவலகத்தில் இருந்து பயந்து ஓட முற்பட்டவர்களை, அலுவலகத்தின் முன் ஹாலில் உட்காரவைத்து விட்டு, காவலர்களை நியமித்துவிட்டு அலுவலகத்தின் உள்ளே சென்றோம். அங்கு நகராட்சி ஆணையாளர் திரு.இரவிசந்திரன் அவர்கள் அறைக்கு சென்று பார்த்தபோது அங்கே அவர் இல்லாத காரணத்தால் அவர் அறைக்கு இடது புறம் இருந்த பண்டக அறைக்கு அருகில் இருந்த அறைக்கு சென்றோம், அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தான் நகராட்சி நிர்வாக அலுவலர் சந்திரா என்று சொன்னார். அவர்களிடம் மேற்படி நகராட்சி ஆணையாளரை பற்றி கேட்ட போது காலையில் அலுவலகம் வந்ததாகவும் அதணை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றதாகவும், பின்னர் அலுவலகம் வந்து விட்டு மதிய உணவு அருந்த சென்றவர் இன்னும் வரவில்லை என்று கூறினார். பின்னர் அவரிடம் எங்களையும், காவல் குழுவினரையும் எங்களது அடையாள அட்டை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டோம். பின்னர் அவரை பற்றி விசாரிக்க தன் பெயர் சந்திரா, வயது 58/2026, நிர்வாக அலுவலர், நகராட்சி

கள்ளக்குறிச்சி என்றும், தான் எண்.2பி/23, கே.டி.ஆர்.நகர், முதல் தெரு, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாக சொன்னார். பின்னர் நானும், காவல் குழுவினரும் மேற்படி நிர்வாக அலுவலர் திருமதி.கி.சந்திரா முன்னிலையில், எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் நிர்வாக அலுவலரின் அறைக்கு வடக்கே வலது பக்கத்தில் இருந்த கணக்காளர் அறைக்கு சென்று அங்கு உள்ளவரை விசாரிக்க தன் பெயர் திருமதி.பூர்ணிமா, இளநிலை உதவியாளர், திருமதி.சர்மிளா, தட்டச்சர் என்றும், மணி த/பெ கதிர்வேல், Data Entry Operater என்றும் சொன்னார்கள். பின்னர் மேற்படி அறைக்கு வடக்கே வலது புறம் இருந்த பொது சுகாதார பிரிவிற்கு சென்று அங்கு உள்ளவரை விசாரிக்க, தன் பெயர் அர்ஜீணன், இளநிலை உதவியாளர் என்று சொன்னார். பின்னர் பொது சுகாதார பிரிவிற்கு வடக்கே வலதுபுறத்தில் இருந்த நகரமைப்பு பிரிவிற்கு சென்று அங்கு உள்ளவரை விசாரிக்க, தன் பெயர் அமலின் சுகுணா, நகரமைப்பு ஆய்வாளர், குணால், இளநிலை உதவியாளர்/எழுத்தர் என்றும் சொன்னார்கள். பின்னர் மேற்படி அறைக்கு வடக்கே வலது புறத்தில் இருந்த பணிமேற்பார்வையாளர் மற்றும் உதவி பொறியாளர்-1, நகராட்சி பொறியாளர் அறைகளை பார்த்தபோது மேற்படி அறைகள் காலியாக இருந்தது. அதணை தொடர்ந்து அலுவலகத்தின் வடமேற்கு மூளையில் இருந்த உதவி பொறியாளர்-2 அறைக்கு சென்று பாத்தபோது, அவ்வறையும் காலியாகவே இருந்தது. பின்னர் பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறைக்கு நேர் எதிரே இருந்த பொறியியல் பிரிவுக்கு சென்று பார்வையிட்டபோது அதுவும் காலியாகவே இருந்தது. பின்னர் நகராட்சி ஆணையாளர் அறைக்கு நேர் எதிரே இருந்த அறைக்கு சென்று அங்கு உள்ள நபரை விசாரிக்க தன் பெயர் மணிகண்டன், காசாளர் என்று கூறினார். அவ்வறைக்கு இடது புறம் வெளியே செல்லும் பாதைக்கு வடக்கு பக்கத்தில் உள்ள அறைக்கு சென்று அங்கு உள்ள நபர்களை பற்றி விசாரிக்க தன் பெயர் கலியசாமி, வருவாய் உதவியாளர் என்று கூறினார். பின்னர் அவ்வறைக்கு வடக்கே இடது புறத்தில் உள்ள அறைக்கு சென்று பார்வையிட்டபோது அதுவும் காலியாகவே இருந்தது. மேலும், அவ்வறைக்கு வடக்கு பக்கத்தில், கடைசியாக இருந்த அறைக்கு சென்று அங்கிருந்த நபர்களை பற்றி விசாரிக்க தன் பெயர் செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர் மற்றும் தினேஷ் குமார், வருவாய் உதவியாளர் என்று சொன்னார்கள். அதனை தொடர்ந்து கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் வரண்டாவில் இருந்த சசிகுமார் த/பெ பாபு, இளநிலை உதவியாளர், மணி த/பெ கதிர்வேல், தொழில் நுட்பஉதவியாளர்களான கௌதம் ராஜ், த/ப ரவி, கவிநிலவு த/பெ அண்ணாமலை, அகிலா த/பெ கணேசன், செந்தில் த/பெ கலியன் (ஓட்டுநர்), நாராயன மூர்த்தி த/பெ அண்ணபூ, இளநிலை உதவியாளர், சிவக்குமார் த/பெ சங்கர், இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர்கள் வேல்முருகன் த/பெ சதாசிவம் மற்றும் வெங்கட்ராமன் த/பெ நேரு, கனகவேல் த/பெ ரஜேந்திரன், வசூல் உதவியாளர், அஜித்குமார் த/பெ அசோக்குமார், Tank Operater, தூய்மைபணியாளர்காளன அன்பரசன் த/பெ பட்ரோஸ், வீரமணி த/பெ கணேசன் மற்றும் பாலமுருகன் த/பெ மாரி மற்றும் பொதுமக்களான திரு.சிவக்குமார் த/பெ திருமலைகவுண்டர், சக்தி த/பெ ரஜேந்திரன், கவுஸ் த/பெ இப்ராஹிம் மற்றும் முகமது அப்துல் லத்தீப் த/பெ அப்துல் குத்தீஸ் ஆகியோர்கள் இருந்தார்கள். அதனை தொடர்ந்து மேற்படி கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தின் தென்மேற்கு மூளையில் அமைந்துள்ள பொது சுகாதார பிரிவிற்கு சென்று அங்கு உள்ள நபர்களை பற்றி விசாரிக்க தன் பெயர் நாராயண மூர்த்தி த/பெ அன்பு, இளைநிலை உதவியாளர், பிராபாகரன், த/பெ சீராளன் (பயிற்சி துப்பரவு ஆய்வாளர்) மற்றும் சிவகார்த்திக் த/பெ ராஜா, Data Entry Operater-ராக தற்காலிகமாக வேலை பார்ப்பதாகவும் சொன்னார். மேற்படி நபர்களை அவரவர்களை அவர்கள் இருக்கையில் வைத்தும் வராண்டாவில் இருந்த நபர்களை அங்கேயும், பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் திருமதி.பூர்னிமாவிடம் ரூ.400/-ம், திருமதி.ஷர்மிளாவிடம் ரூ.2,000/-ம், திரு.மணிகண்டனிடம் ரூ.100/-ம் திரு.கலியசாமி ரூ.600/-ம், திரு.தினேஷ்குமாரிடம் ரூ.500/-ம், திரு.கவுதம் ராஜிடம் ரூ.300/-, திரு.செந்தில், ஓட்டுனரிடம் ரூ.500/-ம், திரு.நாரயணமூர்த்திடம் ரூ.100/- திரு.வேல்முருகனிடம் ரூ.100/-ம், திரு.வீரமணியிடம் ரூ.600/-ம், திரு.பிரபாகரிடமும் ரூ.700/-ம், திரு.சிவகார்த்திகிடம் ரூ.200/-ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்ததில்

அணைவருமே தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக கூறும் காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும் அவரவர்களிடமிருந்த பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வரண்டாவில் இருந்த தனி நபர்களை ஒவ்வொருவராக விசாரிக்க தனது பெயர் 1. திரு.சிவக்குமார் த/பெ திருமலை கவுண்டர் என்றும் தான் கள்ளக்குறிச்சி புதிய பேருந்துநிலையத்திற்கு வண்டி செல்லும் பேருந்துகளுக்கான பேருந்து நிலைய நுழைவு கட்டனம் வசூக்கும் உரிமை பெற்றவர் என்றும் அது தொடர்பாக 19.06.2026ந்தேதியிடப்பட்ட கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தின் கடிதத்தின் படி தான் செலுத்தவேண்டிய ரூ.3,00,000/- இன்று கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் இரசீது எண்.238342-ன்படி இன்று காசளார் திரு.மணிகண்டனிடம் செலுத்தியது போக மீதும் ரூ.13,000/- (500x26) தனது JCB வாகனத்தை பழுதுபாரப்பதற்காகவும், தனக்கு ஏற்பட்ட தோள்பட்டை வலி சிகிச்சைக்காகவும் வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 2. திரு.முகமது அப்துல் லத்தீப், வயது 23/2026, த/பெ அப்துல் குத்துஸ் என்றும், பிறப்பு சான்றிதழிலில் பெயர் திருத்தம் செய்ய வந்ததாக கூறினார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.5,500/- (500 x 11) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தனது குடும்ப செலவிற்காக வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 3. திரு.சக்தி த/பெ ரஜேந்திரன் என்றும், தான் சாலையோர வியாபார அடையாள அட்டை தொடர்பாக விசாரிக்க வந்ததாக கூறினார். அவரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.2,100/- (500 x 3) (200 x 2) (100 x 2) பணம் இருந்தது, அதை பற்றி கேட்க, தான் தனது மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததால் மேற்படி பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, நகராட்சி ஆணையாளர் அறைக்கு நேர் எதிரே இருந்த அறையில் இருந்த காசாளர் திரு.மணிகண்டன் என்பவருடைய இருக்கையை சோதணை செய்ததில் அவரது மேஜை ட்ராயரில் ரூ.3,35,480/- இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் இன்றைய நாள் 03.07.2026-ந்தேதி பிறப்பு, இறப்பு, கொடிநாள் வசூல், தொழிவரி, சொத்துவரி, குடிநீர் வரி, வாடகை, தகனமேடை கட்டனம், சி.ஆர்.எஸ் பிறப்பு சான்றிதழ் கட்டனம் மற்றும் இதர கட்டணங்கள் தொடர்புடைய இன்றைய வசூல் என்று சொன்னார். எனவே மேற்படி பணம் நிர்வாக அலுவலர் முன்னிலையில் திருப்பி அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, அவரிடம் இன்றைய (03.07.2026) கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக BRV Abstract மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பற்றி கேட்டபோது அவர் தனது log.in-க்கு சென்று BRV Abstract மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பதிவிறக்கம் செய்து தந்தார். மேற்படி பிதிவிறக்கம் செய்யப்பட்ட BRV Abstract மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டபோது அதில் மொத்த பரிவர்த்தைகளை 97 என்றும், ஒப்புகை அளிக்கப்பட்டவை 01 என்றும், இரசீதின் எண்ணிக்கை 96 என்றும், இரசீதுக்கான பணம் ரூ.4,20,014/- என்றும் இருந்தது. மேற்படி வசூல் செய்யப்பட்ட தொகைக்கும், BRV Abstract மற்றும் அது தொடர்பான ஆவணங்களில் இருந்த தொகைக்கும் வித்தியாசம் ரூ.84,534/- இருந்தது. அதை பற்றி கேட்டபோது அவர் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை எனவே மேற்படி பற்றாகுறையான தொகையை (Deficit Amount) Rs.84,534/- பற்றி விசாரணைக்காக மகஜரில் குறித்துக்கொள்ளப்பட்டது. மேலும் 03.07.2026-க்கான கள்ளக்குறிச்சி நகராட்சி BRV Abstract, Service wise summary, Bank Receipt Voucher, Service Request Status Wise Summary மற்றும் Service Request Register ஆக மொத்தம் 24 தாள்கள் கொண்ட கணிணியில் (Download) பதிவிரக்கம் செய்யப்பட்ட ஆவணம் விசாரணைக்காக நிர்வாக அலுவலர் திருமதி.சந்திரா, காசாளர் மணிகண்டன், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திருமதி.சந்தரா, நிர்வாக அலுவலரின் இருக்கையையும், அவரது காபி நிற கைபையையும் சோதணை செய்ததில் அதில் ரூ.1,500/- (200x5), (500x1) இருந்தது. மேற்படி தொகையை பற்றி கேட்டபோது அவர் எந்த விளக்கமும் சொல்லாததால், மேற்படி தொகை இலஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்பதால் ரூ.1500/- சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி. அமலின் சுகுணா, நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் இருக்கையையும், அவரது குங்கும நிற கைபையும் சோதணை செய்ததில் அதில் ரூ.1,500/- (100x2), (50x16) (20x25) இருந்தது. மேற்படி தொகையை

பற்றி கேட்டபோது அவர் எந்த விளக்கமும் சொல்லாததால், மேற்படி தொகை இலஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்பதால் ரூ.1,500 சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.குணால், எழுத்தர் அவர்களை சோதணை செய்ததில் அவரிடம் ரூ.1,000/- (500x2) இருந்தது. மேற்படி தொகையை பற்றி கேட்டபோது அவர் எந்த விளக்கமும் சொல்லாததால், மேற்படி தொகை இலஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்பதால் ரூ.1,000 சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதணை தொடர்ந்து திரு.செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர் அவர்களை சோதணை செய்ததில் அவரிடம் ரூ.8,500/- (500X17) இருந்தது. மேற்படி தொகையை பற்றி கேட்டபோது அவர் எந்த விளக்கமும் சொல்லாததால், மேற்படி தொகை இலஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்பதால் ரூ.8,500 சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இருக்கையை சோதணை செய்ததில் அவர் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நாற்காலிக்கு வலது புறத்தில் இருந்த மேஜையின் கப்போடில் மூன்று 500 ரூபாய் கட்டுகளாக மொத்தம் பணம் ரூ.1,50,000/- இருந்தது. மேற்படி தொகையை பற்றி கேட்டபோது, அதற்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால், ', மேற்படி தொகை இலஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்பதால் ரூ.1,50,000/- சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் வருவாய் பிரிவில் இருந்த வரி வசூலிப்பாளர் திரு.கமலகண்ணன் என்பவருடைய இருக்கையை சோதணை செய்ததில் அவருடைய ட்ராயரில் இருந்த டால்மியா சிமெண்ட் என்று அச்சிடப்பட்ட டைரியின் நடுவில் ரூ.4,500/- (500X9) இருந்தது. அது தொடர்பாக நிர்வாக அலுவலர் திருமதி. சந்திரா அவர்களிடம் விசாரிக்க மேற்படி நபர் இன்று அலுவலகம் வந்ததாகவும் மதிய உணவிற்கு பின்னர் களஆய்வுக்கு சென்றதாகவும் கூறினார்கள். மேற்படி தொகைக்கு எவ்வித இரசீதியோ முகந்திரமோ இல்லாமல் காணப்பட்ட காரணத்தால் இந்த பணம் இலஞ்சபணமாக இருக்ககூடும் என்பதால் ரூ.4,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், மேற்படி அலுவலகத்தில் இருந்த நிர்வாக அலுவலர் அறை, கணக்கு பிரிவு, பொது சுகாதாரபிரிவு, நகரமைப்பு பிரிவு, பணிமேற்பார்யாளர் அறை, நகராட்சி பொறியாளர் அறை, பொறியியல் அறை, வருவாய் பிரிவு மற்றும் இதர அறைகளை சோதணை செய்ததில் கைப்பற்றப்படகூடிய பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடர்ந்து பணியில் இருந்த கள்ளக்குறிச்சி நிர்வாக அலுவலர் திருமதி.சந்திரா அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்ட வருகை பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளை பற்றி கேட்டபோது பொது பிரிவு வருகை பதிவேடு, வருவாய் பிரிவு வருகை பதிவேடு, நகரமைப்பு வருகை பதிவேடு, நகராட்சி பொறியியல் பிரிவு வருகைப்பதிவேடு மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சி அனுமதியற்ற கட்டுமானத்திற்கு அறிவிப்பு வழங்கும் விபர பதிவவேடு (2025 மற்றும் 2026) ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் கையிருப்பு பதிவேட்டை (Personal Cash Register) பற்றி கேட்டபோது அவ்வாறு ஏதும் இவ்வலுவகலத்தில் பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். மேலும், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் இயக்கபதிவேட்டை பற்றி கேட்டபோது அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி இயக்க பதிவேட்டின் தரவுகளையும் வருகை பதிவேடுகளின் தரவை பார்த்தபோது கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் பொது வருகை பதிவேடு மற்றும் வருவாய் பிரிவு பதிவேட்டில் இன்றைய தினத்திற்கு மேற்படி பதிவேடுகளை சரிபார்த்தற்கான சுருக்கொப்பம் செய்துள்ளார். ஆனால் நகரமைப்பு பிரிவு வருகை பதிவேடு மற்றும் பொறியியல் பிரிவு பதிவேடுகளில் அவ்வாறு சுருக்கொப்பம் செய்யவில்லை, மேலும் 03.07.2026-ந்தேதிக்கான கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக இயக்க பதிவேட்டை பார்வையிட்டதில் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்றதற்கான பதிவகளோ அவர் அலுவலகத்தில் திடீர் ஆய்வின் போது இல்லாததற்கான பதிவுகள் ஏதும் இல்லை. எனவே மேற்சொன்ன பதிவேடுகள் மற்றும் பணம் ரூ.1,67,000/- இலஞ்ச பணமாக பெற்றிருக்ககூடும் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கொடி நாள் வசூல் குறித்து இவ்வலுவலக நிர்வாக அலுவலர் திருமதி.சந்திரா அவர்களிடம் கேட்டபோது, கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் இவ்வலுவகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பிறகு கள்ளக்குறிச்சி நகராட்சி நிர்வாக அலுவலர் திருமதி.சந்திரா மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண்

ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 03.07.2026-ம் தேதி சுமார் 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 04.07.2026-ம் தேதி சுமார் 02.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,67,000/- சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அலுவலர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த கணக்கில் வராத தொகைகள் முறையற்ற வழியிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் தனியர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற வழிகளில் அலுவலர்களால் தனியர்களிடமிருந்து பிரதிபலானாக பெறப்பட்டிருக்கக்கூடிய பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும்,மேலும் அலுவலகர்கள் முறையற்ற வழிகளில் சுயலாபம் அடைய வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு, அரசுப்பணத்தை கையாடல் செய்துள்ளனர் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், நான் கொடுக்கும் இந்த புகாரின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான திருமதி.கி.சந்திரா, க/பெ கிருஷ்ணராஜன், நிர்வாக அலுவலர், நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி, திருமதி.பீ.அமலின் சுகுனா, க/பெ பீலோவளனரசு, நகர்புற அமைப்பு ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி, திரு.கமலகண்ணன், த/பெ நடராஜன், இளநிலை உதவியாளர், நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி, திரு.குணால் த/பெ செந்தில் குமார், இளநிலை உதவியாளர்/எழுத்தர், நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி, திரு.செந்தில்குமார், த/பெ முத்து, வருவாய் ஆய்வாளர், நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி மற்றும் திரு.ச.மணிகண்டன், த/பெ சண்முகம், காசாளர், நகராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Madam,

Received the above computer typed complaint on 04.07.2026 at about 12.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am Registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.05/2026/KLK, u/s 7 and 13(1) (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 14.00 hrs today on 04.07.2026 sd xxxxxx on 04.07.2026 (K.Sathiyaraj) (Deputy Superintendent of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

04.07.2026

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.